# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1990/23 - 2016 ඔක්තෝබර් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.10.27

*1990/23 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 25/73.*

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41ஆம் பிரிவின்கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

தயசிறி ஜயசேகர (வழக்கறிஞர்),
விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
*2016, ஒற்றோபர் 26.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, தேசிய விளையாட்டுக் கழகங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

பகுதி I

**தேசிய விளையாட்டுக் கழகங்களைப் பதிவு செய்தல்**

2. (1) இதற்கான அட்டவணை II இல் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் விளையாட்டு தொடர்பிலான தேசிய விளையாட்டுக் கழகமொன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும்.-

(i) விளையாட்டுத்துறை என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருக்குச் செய்யப்படுதல் வேண்டும்;

(ii) பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் தரப்படும் அ என்னும் படிவத்தில் அமைந்திருத்தல் வேண்டும்;

(iii) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(iv) பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து அனுப்பிவைக்கப்படல் வேண்டும்:-

(அ) இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்டுள்ள விபரங்களை உள்ளடக்கிய தேசிய விளையாட்டுக் கழகத்தின் அமைப்புவிதியின் ஒரு பிரதி;

(ஆ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் பெயர், அலுவலக முகவரி மற்றும் தொடர்பு கொள்ளல் தகவல் ;

(இ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் தற்போதைய குழுவின் உறுப்பினர்களின் பெயர்கள், முகவரி மற்றும் தொடர்பு கொள்ளல் தகவல் ;

(ஈ) அத்தகைய குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்களின் ஒரு பிரதி;

(உ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கணக்குகளின் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி;

(ஊ) அத்தகைய கழகத்தின் இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றினதும் அத்தகைய இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகளின் குழு உறுப்பினர்களினதும் பெயர்கள், முகவரிகள் மற்றும் வேறு தொடர்பு கொள்ளல் தகவல்கள் ஆகியன உள்ளிட்ட விபரங்கள்.

(2) உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகத்தைப் பதிவு செய்வதற்கு முன்னர், பணிப்பாளர் தலைமையதிபதி அவசியமேற்படுமிடத்து ஏதேனும் மேலதிக தகவல்களைக் கோரலாம்.

(4) பதிவு செய்யப்படுவதற்காக விண்ணப்பிக்கும் ஒரு தேசிய விளையாட்டுக் கழகம், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்தொழுகியுள்ளதென்று அமைச்சர் திருப்தியுறின், பதிவுக்கட்டணமாக ஐயாயிரம் ரூபா பணத்தொகையொன்றை அனுப்பிவைக்குமாறு அத்தேசிய விளையாட்டுக் கழகத்திற்கு அறிவிக்குமாறு பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணித்தல் வேண்டும்.

(5) பதிவுக் கட்டணம் கிடைக்கப்பெற்றதும் அமைச்சர் அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தைப் பதிவு செய்தல் வேண்டும் என்பதோடு, பொருளளவில் அட்டவணை I இல் தரப்பட்டுள்ள ஆ என்னும் படிவத்தில் பதிவுச் சான்றிதழ் ஒன்றை அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்திற்கு வழங்குதலும் வேண்டும்.

(6) முன்னதாக இரத்து செய்யப்பட்டால் அல்லது இடைநிறுத்தப்பட்டாலொழிய, அத்தகைய சான்றிதழ் அதில் குறித்துரைக்கப்படும் அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகம் எல்லா நோக்கங்களுக்காகவும் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கான முடிவான சான்றாக அமைதல் வேண்டும்.

(7) அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதிலிருந்து அறுபது நாட்களுக்குள் அவ்விண்ணப்பம் தொடர்பான தீர்மானத்தை பதிவுக்கான விண்ணப்பத்தில் கைச்சாத்திட்டு சமர்ப்பித்த தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு பணிப்பாளர் தலைமையதிபதி அறிவித்தல் வேண்டும்.

(8) விளையாட்டுத்துறை அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள தேசிய விளையாட்டுக் கழகங்களின் பதிவேடு ஒன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி பேணி வருதல் வேண்டும். பொருளளவில் அட்டவணை I இல் தரப்படும் இ என்னும் படிவத்தில் இப்பதிவேடு அமைந்திருத்தல் வேண்டும்.

*பகுதி II*

**தேசிய விளையாட்டுக் கழகத்தின் அமைப்புவிதி**

3. (1) இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கிய அமைப்புவிதி ஒன்றை ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அது பணிப்பாளர் தலைமையதிபதியினால் பதிவு செய்யப்பட்டிருத்தலும் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், இவ்வொழுங்குவிதிகள் தொடங்கும் திகதியன்று ஒரு குறிப்பிட்ட விளையாட்டு தொடர்பாக பதிவு செய்யப்பட்டிருக்கும் ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகம் ஒன்று, இவ்வொழுங்குவிதிகள் தொடங்கும் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள்.-

(i) இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய அமைப்பு விதி; அத்துடன்

(ii) சர்வதேச தர வரிசைப்படுத்தலின் தற்போதைய மட்டம், குறிப்பிட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்படும் இலக்கு மற்றும் செயலாற்றுகை மட்டத்தை அதிகரிப்பதற்கான மூலோபாயங்கள் ஆகியன அடங்கிய அடுத்த பத்து ஆண்டுகளுக்கான ஒரு கூட்டுறவுத்திட்டம் ;

ஆகியவற்றைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும் அது சார்ந்துள்ள முறையேயான சர்வதேச விளையாட்டுச் சம்மேளனத்தின் பணிப்புரைகள், சமவாயங்கள், நடபடிமுறைகள், விதிகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றிற்கு அமைவாக அதன் அமைப்புவிதியை ஆக்குதல் அல்லது திருத்துதல் வேண்டுமென்பதோடு, அங்கீகாரத்திற்காக அதன் விசேட பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) அமைப்புவிதி, அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள் பதிவு செய்யப்படுவதற்காகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

4. ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும் அக்குறிப்பிட்ட விளையாட்டுடன் தொடர்புபட்டிருக்கக்கூடியவையும் அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் அமைப்புவிதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவையுமான இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றை கொண்டிருத்தல் வேண்டும்.

5. (1) ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும் பின்வருவோர் அடங்கலாக தமது அமைப்புவிதியில் எடுத்துக்காட்டப்பட்டவாறான அத்தகைய எண்ணிக்கையினராக பதவிதாங்குநர்கள் அடங்கிய குழு ஒன்றைத் தெரிவு செய்தல் வேண்டும்:-

(i) தலைவர் மற்றும் உப தலைவர்;

(ii) செயலாளர் மற்றும் உப செயலாளர் ; மற்றும்

(iii) (அ) இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் ஓர் உறுப்பினராக இருக்கும் ; அல்லது

(ஆ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சான்றுப்படுத்தப்பட்ட வியாபார கணக்காளர் சான்றிதழ் ஒன்றை அல்லது அதற்கு மேலான ஒன்றைக் கொண்டிருக்கும்; அல்லது

(இ) இலங்கை வங்கியாளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட தொழிலரான ஒரு சான்றிதழைக் கொண்டிருக்கும்

ஒரு பொருளாளர்; அத்துடன்

(iv) நிதி முகாமைத்துவத் துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவம் கொண்ட ஓர் உப செயலாளர்.

(2) குழுவின் ஒவ்வொரு பதவிதாங்குநரும்.-

(i) வருடாந்த பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்;

(ii) நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் ஒரு மேலதிகக் காலப்பகுதிக்குத் தெரிவு செய்யப்படத் தகுதியுடையவராதலும் வேண்டும்:

ஆயின் மேலும், ஒரு பதவிதாங்குநர் ஒழுக்காற்று காரணங்களின்பேரில் ஒழுக்காற்றுக் குழுவினால் பதவியிலிருந்து நீக்கப்பட்டால், மேலும் ஒரு பதவிக் காலத்திற்கு மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதலாகாது.

(3) தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகிய பதவிகளில் ஏற்படும் ஏதேனும் வெற்றிடம் விசேட பொதுக் கூட்டமொன்றில் நிரப்பப்படலாம். வேறு ஏதேனும் வெற்றிடம் வருடாந்த பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதற்கு உட்பட்டு, குழுக்கூட்டத்தில் நிரப்பப்படலாம்.

(4) ஆளொருவர்:-

(அ) அவர் சித்தசுவாதீனமற்றவரெனத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்படின் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஆ) அவர் கடனிறுக்க வகையற்றவரெனத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்படின் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(இ) முந்திய நான்கு ஆண்டு காலப்பகுதியில் ஆறு மாதங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை ஒன்றை அனுபவித்து முடித்திருப்பின்; அல்லது அனுபவித்துக் கொண்டிருப்பின்

(ஈ) ஆறு மாதங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை மூலம் தண்டிக்கப்படவேண்டிய தவறொன்றிற்காக தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் அல்லது இராணுவ மன்றமொன்றினால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(உ) விளையாட்டுச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் தவறொன்றிற்காக குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் ;

(ஊ) முன்னதாக ஒரு தேசிய விளையாட்டுக் கழகத்தின் குழுவில் பதவி வகித்து, ஒரு நிதி மோசடி, முறைகேடு, ஊழற் பழக்கம், ஒழுக்காற்று மீறல் அல்லது அத்தகைய ஏதேனும் தவறுக்காக அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தினால் நியமிக்கப்பட்டதும் தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்டதுமான ஒரு குழுவினால் உரிய விசாரணையின் பின்னர் குற்றவாளியாகக் காணப்பட்டு, அத்தகைய முடிபு அவரை பதவி வகிப்பதற்குப் பொருத்தமற்றவராக ஆக்குமாக்கியிருப்பின்;

(எ) விளையாட்டுக்கள் சட்டத்தின் 32 ஆம் பிரிவினை மீறிச் செயல்பட்டதற்காக எந்த தேசிய விளையாட்டுக் கழகம் தொடர்பாக ஒரு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதோ, அந்த தேசிய விளையாட்டுக் கழகத்தின் ஒரு குழுவின் பதவிதாங்குநராக இருந்திருப்பின்;

(ஏ) பெயர் குறித்த நியமனம் சமர்ப்பித்தலுக்கு முன்னரான இரண்டு வருட காலப் பகுதியில் ஒரு சம்பளம் செலுத்தப்பட்ட ஊழியராக ஏதேனும் ஊடக நிறுவனமொன்றில் தொழில்சார் பத்திரிகையாளராக அல்லது மின்னியல் அல்லது அச்சு ஊடகமொன்றில் சுயாதீன பத்திரிகையாளராகப் பணியாற்றியிருப்பின் அல்லது ஊடக நிறுவனமொன்றின் ஓர் உரிமையாளராக பயன்பெறும் உரிமையாளராக அல்லது கூட்டு உரிமையாளராக அல்லது பிரதான பங்குதாரராக இருந்திருப்பின்;

(ஐ) குறிப்பிட்ட விளையாட்டின் ஒரு போட்டியாளாராக தேசிய குழுவில் அல்லது தேசிய அணியில் இருப்பவரின் ஒரு பெற்றாராக அல்லது உடன் பிறப்பாக இருப்பின்;

(ஒ) பெயர் குறித்த நியமனம் சமர்ப்பிக்கப்படுதலுக்கு முன்னரான இரண்டு வருட காலப் பகுதியில் அத்தேசிய விளையாட்டுக் கழகத்தின் ஒரு தொழில்வாண்மைத்துவ பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றியிருப்பின்;

(ஓ) ஒரு விளையாட்டு வீரரின் ஒரு முகவராக அல்லது முகாமையாளராக இருப்பின்;

(ஔ) ஓர் இலங்கைப் பிரசையாக இல்லாதிருப்பின் அல்லது இல்லாதொழியின்;

(க) பெயர் குறித்த நியமனம் சமர்ப்பித்தலுக்கு முன்னரான இரண்டு வருட காலப் பகுதியில் விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு கியர்கள் அல்லது அத்தகைய விளையாட்டுடன் தொடர்புபட்ட அத்தகைய பொருட்கள் அல்லது உபகரணங்கள் ஆகியவற்றை அத்தகைய விளையாட்டுச் சங்கத்திற்கு விற்பனை செய்வதில் அல்லது விநியோகிப்பதில் ஈடுபட்டிருப்பின் அல்லது விளையாட்டுடன் தொடர்புபட்ட பயிற்சி நிகழ்ச்சி வழங்குவதில் (பாடசாலை) ஈடுபட்டிருப்பின் அல்லது விளையாட்டுடன் தொடர்புபட்ட சேவைகள் வழங்குவதில் ஈடுபட்டிருப்பின்;

(ங) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பந்தயம் பிடித்தல் அல்லது சூதாட்டம் அல்லது பணயம் வைத்தல் ஆகிய வியாபாரத்தை நடத்துவதில் ஈடுபட்டிருப்பின்;

(ச) விளையாட்டுத்துறை அமைச்சில் பணியாற்றும் அல்லது அங்கு தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஓர் அரசாங்க அலுவலராகவிருப்பின்;

(ஞ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் தீர்மானத்தை மேற்கொள்ளும் அமைப்பினால் அல்லது அது எந்த சர்வதேச விளையாட்டு நிறுவகத்தோடு இணைக்கப்பட்டுள்ளதோ அந்த சர்வதேச விளையாட்டு நிறுவகத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு தகுதிவாய்ந்த அமைப்பினால் விதிக்கப்பட்ட ஒரு தடையை, இடைநிறுத்தலை அல்லது விலக்கலை அனுபவிப்பாராயின் அல்லது பெயர் குறித்த நியமனத் தினத்தன்று அவர் அத்தகைய தடையை, இடைநிறுத்தத்தை அல்லது விலக்கலை அனுபவித்து இரண்டு ஆண்டுகள் கடக்காதிருப்பின்;

(ட) பெயர் குறித்த நியமனம் சமர்ப்பிக்கப்படுதலுக்கு முன்னரான நான்கு வருட காலப் பகுதியில் ஊக்கு பதார்த்த பயன்பாட்டுக்காக, ஊழலுக்காக, பந்தயம் பிடித்தமைக்காக, உள்ளக தகவல்களை துஷ்பிரயோகம் செய்தமைக்காக, அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கு எதிரான அல்லது ஊழலுக்கெதிரான மன்றினால் இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கு எதிரான முகவராண்மையினால் அல்லது அது இணைக்கப்பட்டுள்ள சர்வதேச விளையாட்டு நிறுவகத்தினால் அல்லது சம்மேளனத்தினால் அல்லது உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கு எதிரான நிறுவகத்தினால் விதிக்கப்பட்ட தண்டணையை அனுபவித்திருப்பின் அல்லது அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தினால் அல்லது சர்வதேச நிறுவனத்தினால் அல்லது உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கு எதிரான நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட ஒரு தடைக்கு, இடைநிறுத்தலுக்கு அல்லது விலக்கலுக்கு ஆளாயிருப்பின்;

(ண) பெயர் குறித்த நியமனத்தின்போது எழுபது வயதைப் பூர்த்தி செய்திருப்பின்;

(த) விளையாட்டுத்துறை அமைச்சரின் அங்கீகாரத்தோடு அல்லது ஒருப்பாட்டுடன் விளையாட்டுடன் தொடர்புபட்ட ஒரு செயற்பாட்டிற்காக சர்வதேச நிகழ்வு ஒன்றில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு நபராகராகவிருந்து, இலங்கைக்குத் திரும்பி வராதிருப்பின் ;

(ந) பாராளுமன்ற, உறுப்பினராக ஏதேனும் மாகாணசபை உறுப்பினராக, அல்லது உள்ளூராட்சி சபை உறுப்பினராக இருப்பின் அல்லது வரின்; ஆயின், அத்தகைய ஆள், ஒரு கழகத்தினால் அல்லது இணைப்புக்களரியினால் முன்னெடுக்கப்பட்ட விளையாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார் அல்லது விளையாட்டுத்துறை அமைச்சினால் அல்லது ஒரு தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட ஏதேனும் முக்கிய விளையாட்டுப் போட்டியொன்றில் போட்டியில், அல்லது விளையாட்டில் பங்குபற்றி, மேற்சொல்லப்பட்டவாறு பயன்படுமாறு வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பின், அவர் இப்பிரிவிற்கமைய தகுதியிழந்தவராத லாகாது.

(ப) அத்தகைய தேசிய விளையாட்டுச் சங்கத்தின் ஒரு தேர்தல் குழு உறுப்பினராக இருப்பின்;

(ம) உரியவாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை விதித்துரைக்கப்பட்ட காலப் பகுதியினுள் சமர்ப்பிக்கத் தவறிய அல்லது உதாசீனம் செய்த தேசிய விளையாட்டுக் கழகமொன்றின் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் பதவி வகித்த ஒருவராயிருப்பின்;

அவர் ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகத்தின் குழுவொன்றின் ஓர் உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது வேறு வகையில் ஏதேனும் சம்பளம் செலுத்தப்படும் அல்லது சம்பளம் செலுத்தப்படாத பதவி வகிக்க அல்லது பதவியில் தொடர்ந்திருக்க அல்லது சம்பளம் செலுத்தப்படும் அல்லது சம்பளம் செலுத்தப்படாத ஒரு தொழில் நிலையை வகிக்க அல்லது குழு உறுப்பினராக இருக்க அல்லது ஒரு தேசிய விளையாட்டுக் கழகத்தின் இணைப்பமைப்பொன்றுக்கு களரியொன்றிற்கு அல்லது ஒழுங்கமைப்புக்கு ஒரு நியமனத்தராக இருக்கத் தகுதியற்றவராதல் வேண்டும்.

(5) ஏதேனும் பெறுகைகளில் ஏதேனும் ஒரு வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறையுடைய தேசிய விளையாட்டுக் கழகக் குழுவின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் ஒரு வருடாந்த அடிப்படையில் தமது அக்கறையின் தன்மையை வெளியிடுதல் வேண்டும்.

6. இவ்வொழுங்கு விதிகள் நடைமுறைக்கு வரும் திகதிக்கு உடனடுத்து முந்திய நாளன்று பதவி வகித்த பதவி தாங்குநர்கள் குழு அமைப்புவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறு தெரிவு செய்யப்படும்வரை தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதவி தாங்குநர்களாகப் பணியாற்றுதல் வேண்டும்.

## பகுதி III

### தேசிய விளையாட்டுக் கழகங்களின் கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணிகள்

7. ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும் பின்வரும் கடமைகள், தத்துவங்கள் மற்றும் பணிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் .-

(i) சம்பந்தப்பட்ட விளையாட்டை இலங்கையின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு மட்டத்திலும் அபிவிருத்தி செய்தலும் மேம்படுத்துதலும்;

(ii) அத்தகைய விளையாட்டில் வீரர்களின் பங்கேற்பை அதிகரித்து தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரத்தையும் தரவரிசையையும் எய்தும் நோக்குடன் அத்தகைய விளையாட்டை ஊக்குவிக்கவும் பிரபல்யப்படுத்தவும் தேவையான வசதிகளை மேம்படுத்துதல்;

(iii) அத்தகைய விளையாட்டின் தரத்தை சர்வதேச தரவரிசை மட்டத்திற்கு உயர்த்துதல்;

(iv) தேசிய அணியின் சாதனை மட்டத்தை அதிகரித்தல்;

(v) அத்தகைய விளையாட்டில் ஒவ்வொரு வயதுக் குழுவிலும் உள்ள திறமையான ஆட்களை இனங்கண்டு அவர்களுக்கு ஒவ்வொரு வழியிலும் முறையிலும் ஆதரவு வழங்குதல்;

(vi) முறையேயான சர்வதேச விளையாட்டுச் சம்மேளனத்தினால் குறித்துரைக்கப்பட்ட தெரிவு நெறிகளுக்கு உரிய கவனஞ் செலுத்தியும் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தேசிய தெரிவுக் குழுவிற்கமையவும் பணிப்பாளர் தலைமைபதிபதியின் ஒருங்கிணைப்போடும் சர்வதேச அல்லது பிராந்திய விளையாட்டு நிகழ்வுகளில் நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான வீரர்களையும் அணியையும் தெரிவு செய்வதற்கு வெளிப்படையான தெரிவு நெறியொன்றை வகுத்தல்;

(vii) நிருவாகத்திலும் ஆளுமையிலும் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தல்;

(viii) விளையாட்டு வீரர்களின் திறமையையும் ஆற்றல்களையும் அதிகரிப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் ;

(ix) விளையாட்டு வீரர்களின் சுய விபரம் பற்றிய தகவல்கள், பங்கு பற்றிய நிகழ்ச்சிகள், விளையாட்டுகள், போட்டிகள், விளையாட்டுப்போட்டிகள், பிரதிநிதித்துவப் படுத்திய அணிகள், அவர்களுடைய சாதனைகள், எண்வரிசைப்படுத்தல், தரவரிசைப்படுத்தல் மற்றும் நிலை வரிசைப்படுத்தல் ஆகியன வழங்கப்படுமிடத்து அத்தகைய எண்வரிசை, தரவரிசை மற்றும் நிலை வரிசை ஆகியன அடங்கிய விளையாட்டு வீரர்களின் சுயவிபரத் தளத்தை பயன்படுத்தி உயர்ந்த சாதனை படைக்கும் மெய்வல்லுனர்கள் பற்றி தொடர்ந்தாராயும் முறைமையொன்றை பேணுதல்;

(x) நிதி ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல் ;

(xi) தற்போதைய சர்வதேச தரவரிசைப்படுத்தல், குறிப்பிட்ட காலப்பகுதியினுள் எதிபார்க்கப்படும் இலக்குகள் மற்றும் சாதனை மட்டத்தை அதிகரிப்பதற்கான மூலோபாயங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பத்து ஆண்டுகளுக்கான கூட்டுறவுத் திட்டத்தைத் தயாரித்தல் ;

(xii) உடனடுத்து வரும் ஆண்டுக்கான வருடாந்த செயல் திட்டமொன்றைத் தயாரித்து அதனை நடப்பாண்டின் மூன்று மாதங்கள் முடியமுன்னர் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பித்தல்;

(xiii) குழுவினால் உறுதிப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களை ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவடைவதற்கு இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல்;

(xiv) வருடாந்தப் பொதுக் கூட்டத்தையும் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை தேசிய விளையாட்டுக் கழகத்தின் குழுவின் பதவிதாங்குநர்கள் மற்றும் தேர்தல் குழு தெரிவுக்குழு, தீர்மானம் மேற்கொள்ளும் குழு, எண்வரிசைப்படுத்தும் குழு, தரவரிசைப் படுத்தும் குழு, தொழில்நுட்பக் குழு, நிதிக் குழு மற்றும் ஒழுக்காற்றுக் குழு ஆகிய குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலையும் நடத்துதல்;

(xv) முந்திய ஆண்டு தொடர்பான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களோடு ஆண்டறிக்கையொன்றை அதன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல் ;

(xvi) ஒவ்வோர் ஆண்டும் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்று ஒரு மாதத்தினுள் பின்வரும் ஆவணங்களை அவசியமேற்படுமிடத்து பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல்:-

(அ) அவசியமேற்படுமிடத்து, தேசிய விளையாட்டுக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பதவிதாங்குநர்களின் சுய விபரம்;

(ஆ) வரவுப் பதிவேட்டின் ஒரு பிரதியோடு ஆண்டுப் பொதுக் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்களின் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி;

(இ) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அவ்வாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றின் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு பிரதியும் அத்தகைய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதற்கான சான்றும்;

(ஈ) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் குழு உறுப்பினர்களின் பெயர்களும் தொடர்பு கொள்ளல் தகவல்களும்;

(உ) விளையாட்டுப்போட்டிக் கலண்டர் மற்றும் திறமை இனங்காணல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியன உள்ளிட்ட அவர்களது அமைப்புவிதியில் எடுத்துரைக்கப்பட்டவாறான காலப் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டம்;

(ஊ) தகவலுக்காகவும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதி உதவிகளைக் கண்காணிப்பதற்காகவும் தேசிய விளையாட்டுக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஈராண்டுக்கொரு முறையான முன்னேற்ற அறிக்கை.

(xvii) ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்குக் குறைந்தது நாற்பது நாட்களுக்கு முன்னாதாக ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிப்பதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் பட்டியல், அதற்கு முந்திய நிதி ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றின் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி ஆகியவற்றை உள்ளடக்கிய அறிவித்தல் ஒன்றை நியமத்தர்களின் நிரலுடன் சேர்த்து அதன் இணை நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தல்;

(xviii) குறிப்பிட்ட விளையாட்டில் ஈடுபட்டுள்ள இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புக்கள் ஆகியவற்றைப் பதிவு செய்தல் மற்றும் பொருளளவில் இதற்கான அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள ஈ என்னும் படிவத்தில் பதிவேடு ஒன்றைப் பேணுதல்;

(xix) அத்தகைய இணைப்பமைப்புக்கள், களரிகள் அல்லது வேறு ஒழுங்கமைப்புகளுக்கு பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல்;

(xx) ஒழுக்காற்றுக் காரணங்களின்பேரில் அல்லது தேசிய விளையாட்டுக் கழகத்தின் அமைப்புவிதியின் ஏற்பாடுகளை மீறியதனால் சட்டத்துக்கிணங்க நடத்தப்பட்ட ஓர் உரிய மற்றும் முறையான விசாரணையின் பின்னர் இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் வேறு ஒழுங்கமைப்புகளின் பதிவை இரத்து செய்தல் அல்லது இடை நிறுத்துதல்;

(xxi) அரசாங்கத்தின் பெறுகைகள் மற்றும் கேள்விப் பத்திரங்களை வழங்குதல் தொடர்பாக தராதரமான பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றுதல்;

(xxii) உள்நாட்டில் அல்லது சர்வதேசத்திலிருந்து கிடைக்கப்பெறும் நிதிகளுக்கான ஏதேனும் பெறுகை தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் அல்லது தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட பெறுகை நடைமுறையைப் பின்பற்றுதல்;

(xxiii) ஏதேனும் சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகளை இலங்கையில் நடத்துவதற்குத் தேவையான எல்லா நிதியும் தேசிய விளையாட்டுக் கழகத்திடம் இருந்தாலொழிய, அத்தகைய நிகழ்வை இலங்கையில் நடத்துவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதியோடு சர்வதேச சம்மேளனம் ஒன்றுடன் ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளல்;

(xxiv) தேசிய விளையாட்டுக் கழகக் குழுக் கூட்டம் தொடர்பான நடைமுறையையும் அத்தகைய கூட்டத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துதல்;

(xxv) அவசியமேற்படுமிடத்து, தேசிய விளையாட்டுக் கழகத்தின் பணியாள் தொகுதிக்கு தேவையான அத்தகைய எண்ணிக்கையிலான அலுவலர்களை நியமித்தல்.

*பகுதி IV*

**அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராக மேன் முறையீடு செய்யும் நடைமுறை**

8. (1) பதிவுசெய்யப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகத்தின் ஏதேனும் தீர்மானம் அல்லது செயற்பாட்டினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆள் அத்தகைய தீர்மானம் அல்லது செயற்பாடு அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அமைச்சருக்கு மேன் முறையீடு செய்யலாம்.

(2) மேன்முறையீட்டை பரிசீலித்த பின்னர் அமைச்சர் அவசியமாகக்கூடியவாறான மேலும் தகவல்களைக் கோரலாம்.

(3) சம்பந்தப்பட்டக் காரணிகள் அனைத்தையும் பரிசீலித்த பின்னர் அமைச்சர் மேன்முறையீடு செய்தவருக்கும் சம்பந்தப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகத்திற்கும் தனது தீர்மானத்தைத் தெரிவித்தல் வேண்டும்.

(4) சம்பந்தப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகம் அமைச்சரின் தீர்மானத்திற்கு அமைய செயற்படவேண்டும்.

*பகுதி V*

**ஒழுங்குவிதிகளை இல்லாதாக்கல்**

9. சனவரி 15 ஆம் திகதிய 1793/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக் கழகங்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் அதன்கீழ் சட்டபூர்வமாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதாக்கப்படுகின்றன.

10. இல்லாதாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட எல்லா தேசிய விளையாட்டுக் கழகங்களும் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பகுதி VI*

**பொருள்கோடல்**

11. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலொழிய, -

"மெய்வல்லுநர் " என்பது, ஏதேனும் சர்வதேச அல்லது தேசிய மட்ட அல்லது ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்றும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும்

"பந்தயம் பிடித்தல்" என்பது ,

(அ) ஏதேனும் போட்டி, பந்தயம் அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் முடிவு, முன்னேற்றம், நடத்துகை அல்லது வேறு ஏதேனும் அம்சங்கள் தொடர்பாக வேறு ஏதேனும் தரப்புடன் (தனி ஆளோ, கம்பனியோ அல்லது வேறு எவருமோ) ஏதேனும் பந்தயம் வைத்தல், ஏற்றுக்கொள்ளல், பிடித்தல் அல்லது வேறுவிதமான ஏதேனும் பந்தயத்தில் ஈடுபடுதல்;

(ஆ) ஏதேனும் போட்டி, பந்தயம் அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் முடிவு, முன்னேற்றம், நடத்துகை அல்லது வேறு ஏதேனும் அம்சங்கள் தொடர்பாக ஒரு பந்தயத்தில் ஈடுபட வேறு ஏதேனும் தரப்பை இறைஞ்சுதல், தூண்டுதல், கவருதல், அறிவுறுத்தல், இணங்கவைத்தல், ஊக்குவித்தல், வசதியேற்படுத்தல் அல்லது அதிகாரமளித்தல்;

(இ) ஒரு குறிப்பிட்ட போட்டியில் அல்லது விளையாட்டு நிகழ்ச்சியில் விளையாட்டு வீரரின் அறிவிற்கெட்டியவரை ஒரு பந்தயம் சம்பந்தப்பட்ட விடயமாக அமைவதும் அதற்காக தான் ஏதேனும் வெகுமதியை எதிர்ப்பார்க்கும் அல்லது பெற்றுக்கொண்டதுமான ஒரு சம்பவம் நிகழ்வதை உறுதிசெய்தல்

எனப் பொருள் படுவதோடு அவற்றை உள்ளடக்கவும் செய்யும்.

"ஊழல்" என்பது, ஏதேனும் போட்டி அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் முடிவு, முன்னேற்றம், நடத்துகை அல்லது வேறு ஏதேனும் அம்சங்களை நிர்ணயித்தல், நிர்ணயிக்க ஏதேனும் ஒரு வகையில் சூழ்ச்சி செய்தல் அல்லது வேறுவிதமாக முறையற்ற வகையில் செல்வாக்கு செலுத்துதல் அல்லது நிர்ணயித்தல், ஒரு தரப்பாகவிருத்தல் எனப் பொருள்படும்.

"ஊக்கபதார்த்தப் பயன்பாடு" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான சமவாயச் சட்டத்தின் நியதிகளின் படியான ஏதேனும் தவறு எனப் பொருள்படும்.

"பிரதான விளையாட்டுப்போட்டி", "நிகழ்வு" அல்லது "போட்டி" என்பது, ஒரு தேசிய விளையாட்டுக் கழகத்தினால் மேற்கொள்ளப்படும் ஒரு விதப்புரையின்பேரில் அமைச்சரினால் காலத்திற்குக் காலம் அங்கீகரிக்கப்படக்கூடிய ஒரு விளையாட்டுப்போட்டி, விளையாட்டு நிகழ்ச்சி அல்லது போட்டி எனப் பொருள்படும்.

"தேசிய விளையாட்டுக் கழகம் " என்பது, விளையாட்டுக்கள் சட்டத்தில் காணப்படும் அதே பொருளை கொண்டிருக்கும்.

"விளையாட்டுக்கள் சட்டம்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம் எனப் பொருள்படும்.

**அட்டவணை I**

(ஒழுங்குவிதிகள் 2)

படிவம் அ

**தேசிய விளையாட்டுக் கழகத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்**

1. தேசிய விளையாட்டுக் கழகத்தின் பெயர் :..............................................

2. முகவரி :..................................................................

3. தேசிய விளையாட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட திகதி : ............................

4. விளையாட்டின் அல்லது விளையாட்டுத் தொகுதியின் பெயர் : ..................................

5. பின்வரும் ஆவணங்கள் இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளன: ..................................

(அ) வழிகாட்டு நெறிகளாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை III இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கிய அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் அமைப்புவிதியின் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி ; ஆம்/ இல்லை

(ஆ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் பெயர், அலுவலக முகவரி மற்றும் தொடர்பு கொள்ளல் தகவல்கள் மற்றும் அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் தற்போதைய குழுவின் பதவிதாங்குநர்களின் பெயர், அலுவலக முகவரி மற்றும் தொடர்பு கொள்ளல் தகவல்கள் ; ஆம்/ இல்லை

(இ) அத்தகைய குழுவின் பதவிதாங்குநர்கள் தெரிவு செய்யப்பட்ட ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புக்களின் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி; ஆம்/இல்லை

(ஈ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கணக்குகளின் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி; ஆம்/இல்லை

(உ) அத்தகைய விளையாட்டுக் கழகத்தின் இணைப்பமைப்புக்கள் களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகளினதும் அவற்றின் குழு உறுப்பினர்களதும் பெயர்கள், முகவரிகள் மற்றும் ஏனைய தொடர்பு கொள்ளல் தகவல்கள் ஆகியன உள்ளிட்ட விபரங்கள். ஆம்/ இல்லை

6. மேலே குறிப்பிடப்பட்ட குழுவின் தற்போதைய பதவிதாங்குநர்கள் தெரிவு செய்யப்பட்ட ஆண்டுப் பொதுக் கூட்டம் நடைபெற்றத் திகதி :............................................................

பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் சமர்ப்பித்தலை உரிய முறையில் அனுமதித்து............................................. (தேசிய விளையாட்டுக் கழகத்தின் பெயர்) இன் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தையடுத்து இவ்விண்ணப்பம் செய்யபப்படுகிறது.

(தீர்மானத்தின் ஒரு பிரதியையும் கூட்ட அறிக்கையின் ஒரு பிரதியையும் இணைக்க.)

தேசிய விளையாட்டுக் கழகத் தலைவரின் கையொப்பம் :

பெயரும் முகவரியும் :

திகதி:

செயலாளரின் கையொப்பம்:

பெயரும் முகவரியும் :

விண்ணப்பிப்பவரின் கையொப்பம் :

திகதி:

(ஒழுங்குவிதி 2)

படிவம் ஆ

**ஒரு தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதிவுச் சான்றிதழ்**

தேசிய விளையாட்டுக் கழகத்தின் பெயர் : .............................................

.............................................. 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் (விளையாட்டைக் குறிப்பிடுக)........................................ .காக 20..... ஆம் ஆண்டு................. மாதம்........................ ஆம் திகதியான இன்றைய தினத்திலிருந்து அமுலுக்கு வரும்வண்ணம் பதிவு செய்யப்பட்டுள்ளதென்று இத்தால் சான்றுறுதிப்படுத்தப்படுகிறது. கழகத்துக்கு வழங்கப்பட்ட பதிவு இலக்கம்........................... ஆகும்.

விளையாட்டுத்துறை அமைச்சர்.

திகதி:

(ஒழுங்குவிதி 2)

படிவம் இ

**தேசிய விளையாட்டுக் கழகங்களின் பதிவேடு**

1. விளையாட்டின் அல்லது விளையாட்டுகள் தொகுதியின் பெயர் : ............................

2. விளையாட்டுகள் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழான கட்டளைபற்றிய விபரம் : .............................................

(1) வர்த்தமானியின் திகதி/இலக்கம்: ...........................................
(2) விளையாட்டுத்துறை அமைச்சின்/விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் கோவை இலக்கம் :..................

3. ஒரு தேசிய விளையாட்டுக் கழகமாக முதலாவதாகப் பதிவு செய்யப்பட்ட திகதி:................................

4. சங்கத்தினதும் பதவிதாங்குநர்களினதும் முகவரி மற்றும் தொடர்பு கொள்ளல் தகவல்கள்: ...................
5. பதிவின் ஏதேனும் முந்திய இரத்து/இடைநிறுத்தம் மற்றும் இரத்தின்/இடைநிறுத்தத்தின் திகதி :................
6. இடைக்கால குழு (இருப்பின் மற்றும் காலப்பகுதி)
7. நடத்தப்பட்ட ஆண்டுப் பொதுக் கூட்டங்கள் - ஆம்/இல்லை மற்றும் திகதி: ...........................

8. வருடாந்தக் கணக்குகள் கணக்காய்வு நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டன :- ஆம்/ இல்லை

9. பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புவிதி :- ஆம்/இல்லை

10. நடத்தப்பட்ட தேசிய விளையாட்டுப்போட்டிகள்

(ஒழுங்குவிதி 7)

படிவம் ஈ

பகுதி அ

**தேசிய விளையாட்டுக் கழகத்தோடு நேரடியாக தொடர்புபட்ட உறுப்பினர்களின் பதிவேடு**

1. தேசிய விளையாட்டுக் கழகத்தின் பெயரும் முகவரியும்:...........................................

2. இணைப்பமைப்பின் பெயர்: .........................................................................

3. முகவரி: .....................................................

4. உறுப்பினர்களின் எண்ணிக்கை : ............................................................

5. ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் சமுகமளித்திருக்க அனுமதிப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை:................

6. ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை:.....................

7. உறுப்பினர்களின் பெயர்கள்: .............................................

8. வகிக்கும் பதவிகளுடன் பதவிதாங்குநர்களின் பெயர்களும் முகவரிகளும்: ........................................

9. குழு உறுப்பினர்களின் பெயர்களும் முகவரிகளும்:.........................................

பகுதி ஆ

**தேசிய கழகங்களோடு இணைக்கப்பட்டுள்ள மாகாணக் கழகங்கள், மாவட்டக் கழகங்கள், சம்மேளனங்கள், லீகுகள் அல்லது வேறு ஏதேனும் ஒழுங்கமைப்புக்கள்**

1. மாகாணக் கழகங்கள், மாவட்டக் கழகங்கள், சம்மேளனங்கள், லீகுகள் அல்லது வேறு ஏதேனும் ஒழுங்கமைப்புக்களின் பெயர்:..........................................................

2. முகவரி:.........................................................

3. இணைப்பமைப்பின் பெயர்:...............................................

4. முகவரி:..........................................................

5. உறுப்பினர்களின் எண்ணிக்கை: .......................................................

6. வகிக்கும் பதவிகளுடன் பதவிதாங்குநர்களின் பெயர்களும் முகவரிகளும்: ..........................................

7. குழு உறுப்பினர்களின் பெயர்களும் முகவரியும்:.........................................................

(ஒழுங்குவிதி 2)

***அட்டவணை II***

**விளையாட்டுக்களின் பெயர்கள்**

1 பெட்மின்ரன்
2 நீர் விளையாட்டுக்கள்
3 உடற் கட்டுமானம்
4 சைக்கிளோட்டம்
5 துப்பாக்கியால் சுடுதல்
6 ஹொக்கி
7 கராட்டே டோ
8 பாய்த்தோணிகள்
9 றக்பி காற்பந்து
10 பளு தூக்கல்
11 ஜிம்னாஸ்ரிக்
12 கோல்ப்
13 ரெஸ்லிங்
14 வாகன விளையாட்டுகள்
15 கூடைப்பந்து
16 மெய்வல்லுநர்
17 கிறிக்கட்
18 வலைப்பந்து
19 ரெனிஸ்
20 பிரிட்ஜ்
21 கரம்
22 உயிர் காப்பு
23 குத்துச் சண்டை
24 ஜூடோ
25 பிலியட்ஸ் மற்றும் ஸ்னூக்கர்ஸ்
26 கால்பந்து
27 கரப்பந்தாட்டம்
28 எல்லே
29 சதுரங்கம்

30 படகோட்டம்
31 ரேபில் ரெனிஸ்
32 ஸ்குவோஸ்
33 ரேக்வண்டோ
34 மென்பந்து கிறிக்கட்
35 பவர் லிப்டிங்
36 கபடி
37 மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுக்கள்
38 மோட்டர் சைக்கில் பந்தயம்
39 பேஸ்போல்
40 உசு
41 பந்தெறிதல்
42 வில்வித்தை
43 ஈக்வஸ்ட்டேறியன்
44 மரபுவழி கராத்தே
45 ஹேண்ட் போல்
46 கயிறிழுத்தல்
47 சுடுதல்
48 வாள் சண்டை
49 சக்கர நாற்காலி
50 செப்பாக்ட்டறோ
51 சூமோ
52 மொடன் பென்டாத்லன்
53 ஜூ ஜூட்சு
54 சம்போ
55 கோ கோ
56 அங்கம்பொரா
57 கூடோ
58 போல் ரூம் டான்ஸ்
59 றோல் போல்
60 மலையேறுதல்
61 கெனோயிங் என்ட் கயாக்கிங்

(ஒழுங்குவிதி 2,3 மற்றும் 5)

## *அட்டவணை III*

## தேசிய விளையாட்டுக் கழகத்தின் அமைப்புவிதி தொடர்பான விடயங்கள்

ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும் பின்வரும் விபரங்கள் அடங்கிய அமைப்புவிதியைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) வருடத்திற்கு ஒரு முறை ஆண்டுப் பொதுக்கூட்டத்தை நடத்துதல், அதனை ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் முப்பத்தோராம் திகதி அல்லது அதற்கு முன்னர் நடத்துதல் விரும்பத்தக்கது;

(ஆ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் நிதி ஆண்டு ஒவ்வோர் ஆண்டும் சனவரி முதலாம் திகதி தொடங்கி திசெம்பர் முப்பத்தோராம் ஆம் திகதி முடிவுறும் ஒரு கலண்டர் வருடமாக இருக்கவேண்டுமென குறிப்பிடுதல்;

(இ) அவற்றிற்குரிய அமைப்புவிதிக்கமைய சுதந்திரமானதும் நேர்மையானதுமான ஒரு முறையிலும் தேசிய விளையாட்டுக் கழகத்தின் குழுவின் பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்துதல்;

(ஈ) அதன் இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதித்துவ முறை மற்றும் வாக்களிப்பு உரிமை ஆகியவை;

(உ) தத்தமது இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட

ஆணைக்கமைய பிரயோகிக்கப்படவேண்டியதான வாக்கை அளிப்பதற்கு சம்பந்தப்பட்ட இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றிற்கு இயலுமாகச் செய்தல்;

(ஊ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகம் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள இணைப்பமைப்புக்கள், களரிகள் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் தேசிய விளையாட்டுக் கழகத்திற்கு அதுபற்றி அறிக்கையிடுவதற்கும் பொறுப்பாக இருக்கவேண்டிய மாகாண அல்லது மாவட்ட அலுவலர்களை நியமித்தல்;

(எ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகம் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பாடசாலைக் கழகங்களின் இரண்டிற்கு மேற்படாத பிரதிநிதிகளை அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் குழுவில் அத்தகைய இணைக்கப்பட்ட பாடசாலைச் சங்கத்தின் பெயர் நியமனத்தின்பேரில் நியமிப்பதற்கு இயலுமாகச் செய்தல்;

(ஏ) அத்தகைய கழகங்களின் குழுக் கூட்டங்களை குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது நடத்துவதோடு, அத்தகையக் கூட்டங்களில் குறைந்தது ஒரு பாடசாலைக் கழக பிரதிநிதியாவது சமுகமளித்திருத்தல் வேண்டும்;

(ஐ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகம், அதன் இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றிற்கு அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் பற்றி எழுத்து மூலம் நாற்பது நாட்களுக்குக் குறையாத அறிவித்தலை வழங்குதல்;

(ஒ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகம், ஆண்டறிக்கையையும் முந்திய நிதியாண்டு தொடர்பான கணக்காய்வு செய்யப்பட்டதும் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான நிதிக்கூற்றின் பிரதி ஒன்றையும் ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னர் வழங்குதல்;

(ஓ) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகம் அத்தகைய பொதுக்கூட்டத்தில் சமுகமளித்திருக்க உரித்துடையவர்களும் வாக்களிக்கத் தகுதியுடையவர்களுமான உறுப்பினர்களின் பட்டியல் ஒன்றை அத்தகைய உரித்துடைய ஒவ்வோர் உறுப்பினரும் பிரயோகிக்க உரித்துடைய வாக்குகளின் எண்ணிக்கையைக் குறித்துரைத்து ஆண்டுப்பொதுக் கூட்டத்திற்கு குறைந்தது நாற்பது நாட்களுக்கு முன்னர் அதன் இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றிற்கு வழங்குதல்;

(ஔ) குறிப்பிட்ட காலப்பகுதியில் தேவையான விளையாட்டுப் போட்டிகள், போட்டிகள் அல்லது பந்தயங்களில் பங்குபற்றாத ஏதேனும் இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகளுக்கு வாக்களிப்பதற்கான உரிமையை மறுத்தல் மற்றும் புதிய உறுப்பினர்களுக்கு அவர்கள் புதிய உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமையை மறுத்தல்;

(க) தேசிய விளையாட்டுக் கழகத்தின் உடனடுத்த கடந்த குழுப் பதவி தாங்குநர்கள் அத்தகைய கழகத்தின் விடயங்கள் தொடர்பான சகல ஆவணங்களையும் குழுவின் புதிதாக நியமிக்கப்பட்ட பதவி தாங்குநர்களுக்கு அத்தகைய புதிய பதவியாளர்களின் நியமனத்திலிருந்து ஏழு நாட்களுக்குள் ஒப்படைப்பதைக் கட்டாயமானதாக்குதல்;

(ங) பதவி தாங்குநர்களின் நியமனம், நீக்கம், தகைமைகள் ஆகியவற்றுக்கான நடைமுறையையும், தேர்தல் குழு, தீர்மானம் மேற்கொள்ளல் குழு, தெரிவுக் குழு, எண்வரிசைப்படுத்தல் குழு அல்லது தர வரிசைப் படுத்தல் குழு, தொழில்நுட்பக் குழுக்கள், நிதிக் குழு மற்றும் ஒழுக்காற்றுக் குழு ஆகியவற்றின் ஆக்கஅமைவு, பதவிக்காலம் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றையும் குறித்துரைத்தல்.

(ச) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தமது வாக்கை அளிப்பதற்காக இணைப்பமைப்புக்கள், களரிகள் அல்லது ஏனைய ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றினால் நியமிக்கப்படும் ஆட்களின் பெயர்கள் ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னர் தேசிய விளையாட்டுக் கழகத்திற்கு அறிவிக்கப்படல்;

(ஞ) கூட்ட நடப்பெண் இல்லாமை காரணமாக ஒரு தேசிய விளையாட்டுக் கழகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒத்திவைக்கப்படுமிடத்து, அதற்கான நடைமுறையை குறித்துரைத்தல், அதே நிகழ்ச்சி நிரலோடு கூட்டத்தை மீண்டும் கூட்டுவதற்கு பதினான்கு நாள் எழுத்துமூல அறிவித்தல் வழங்கப்படல்;

(ட) இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் இதர ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றின் கணக்கேடுகளை உரிய முறையில் பேணுவதை கட்டாயமாக்குதல்;

(ண) இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகள் ஆகியன ஆண்டுப் பொதுக்கூட்டத்தை, உரிய தேர்தலை

நடத்த மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கத் தவறுமிடத்து, தேசிய விளையாட்டுச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் தேர்தல் வாக்கெடுப்பிலும் பங்கேற்பதற்கான மறுப்பைத் தெரிவித்தல்;

(த) ஓர் ஆள் விளையாட்டு அமைப்புகளின் பின்னணியைக் கொண்டுள்ள ஓர் இலங்கைப் பிரசையாக இருந்தாலொழிய, அத்தகைய ஆள் ஒரு தேசிய விளையாட்டுக் கழகத்தினால் அல்லது அத்தகைய விளையாட்டுக் கழகத்தின் பிரதிநிதியினால் தத்தமது சர்வதேச சம்மேளனத்திற்கு அல்லது ஏதேனும் சர்வதேசச் சங்கத்திற்கு ஒரு தூதுவராக நியமிக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்தல்;

(ந) அத்தகைய கழகங்கள் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றினால் பயிற்சியாளர்கள், நடுவர்கள், நடுத்தீர்ப்பாளர்கள் மற்றும் தீர்ப்பளிப்போர் ஆகியோர் நியமிக்கப்படுதல் மற்றும் அத்தகைய பயிற்சியாளர்கள், நடுவர்கள், நடுத்தீர்ப்பாளர்கள் மற்றும் தீர்ப்பளிப்போர் ஆகியோரை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றுக்கான நடைமுறையை விதித்துரைத்தல்;

(ப) ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும் தத்தமது அமைப்புவிதிகளுக்கிணங்க அதன் வீரர்கள், உறுப்பினர்கள், பயிற்றுவிப்போர், நடுவர்கள், நடுத்தீர்ப்பாளர்கள், தீர்ப்பளிப்போர் மற்றும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்கள் ஆகியோருக்குப் பொருந்துவதான ஒழுக்கநெறிக் கோவை ஒன்றை தத்தமது சர்வதேச சம்மேளனத்தினால் குறித்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கமைய நிறைவேற்றுதல்;

(ம) தேசிய விளையாட்டுக் கழகத்தின் இணைப்பமைப்புக்கள், களரிகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றின் பொறுப்புகளை குறித்துரைத்தல்;

(ய) அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகம் உலக ஊக்கு பதார்த்த பயன்பாட்டுக்கு எதிரான முகவர் கோவை மற்றும் இலங்கை ஊக்கு பதார்த்த பயன்பாட்டுக்கு எதிரான கோவை மற்றும் அவற்றிற்கான ஏதேனும் திருத்தங்கள் ஆகியவற்றைப் பின்பற்றுதல் அல்லது அவற்றிற்கு உட்பட்டு நடத்தல்;

(ர) மெய்வல்லுநர் குழுவொன்றைக் கொண்டிருத்தல் மற்றும் மெய்வல்லுநர் குழுவின் பிரதிநிதிகளை சர்வதேச விளையாட்டு நிறுவனங்களின் அமைப்புவிதிகளுக்கிணங்க தமது ஆளும் அமைப்புகளில் சேர்த்துக்கொள்ளல்.

11- 578

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.